திரு. கரு. சீமைச்சாமி : சார், மத்திய அமைச்சர், எலிக்கறி சாப்பிட்டால் நல்ல உணவு என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறுவிதமாகக் கேள்வி போடலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : பாம்புகளைப் பிடித்தால் ஒரு பாம்புக்கு 5 ரூபாய் என்று கொடுக்கிறோம். அதே போல, எலிகளைப் பிடித்தால், பஞ்சாயத்து யூனியன் மூலமாக ஒரு எலிக்கு 4 அணா, 8 அணா என்று கொடுக்க ஏற்பாடு செய்தால் எலிகளை ஒழிப்பதற்கு அது நல்ல திட்டமாக இருக்குமா, இல்லையா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஒரு எலியைப் பிடித்தால் 4 அணா என்று கொடுத்தால் அதற்கு உண்டாகும் செலவைப் பார்க்க வேண்டும். இது இலாபகரமாக இருந்தால், அந்தத் திட்டத்தை மேற் கொள்ள மக்களே முன் வருவார்கள். அரசாங்கம் ஒத்துழைக்கக் கூடிய நிலையைப் பார்க்கும்பொழுது, எலி ஒழிப்புப் பாஷாணம் கொடுப்பதன் மூலமாக, பரவலாக ஒழிக்கக்கூடிய சூழ்நிலையிருப்ப தால், இப்போது, தோலை அனுப்பினால் ஒத்துக்கொள்ளக்கூடிய நிலை யிருக்கும் என்று தெரிகிறது. தோல் மிருதுவாக இருப்பதால், அடிக்கக்கூடிய நிலையில் தோல் கெட்டு விடுமோ என்ற அச்சம்கூட இருக்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள முந்திரிக் காடுகள்.

*457 வினா—**திரு. எஸ். இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் 1964–65, 1965–66 ஆகிய ஆண்டு களின் போது முந்திரிக் காடுகளைக் குத்தகை எடுத்தவர்களிடமிருந்து வசூலாகவேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

1964–65—நாலாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது ரூபாய் அறுபத்தி ஐந்து காசு.

1965–66—ஆயிரத்து எண்ணூறு ரூபாய்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த பாக்கித் தொகை விருத்தாசலம் வட்டத்தில் யாரிடம் உள்ளது ? எவ்வளவு நாட்களாக உள்ளது ? விருத்தாசலம் வட்டத்திலே உள்ள இருப்பூர் கிராமத்தில் நம்முடைய முன்னாள் அமைச்சருடைய உறவினர் இன்னும் பணம் கொடுக்காமல் இருக்கிறார் என்று சொல்கிறார்களே அது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னாள் அமைச்சருடைய உறவினர் என்று சொல்லவேண்டாம். யார், யார் என்று கேட்டீர் களே அதோடு விட்டுவிடுங்கள்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ரூ. 3,000 வர வேண்டியிருக் கிறது. ஜி. பரமசிவம் என்பவர், மேற்கிருப்பு விருத்தாசலம் வட்டத்தைச் சேர்ந்தவர் ரூ. 3,000 கொடுக்கவேண்டியிருக்கிறது. ஏலத்தொகை ரூ. 13,415. அவர்கள் கொடுக்கவேண்டிய தொகை ரூ. 3,000.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்த முந்திரித் தோட்டங்கள் காட்டிலாகாவினால் பராமரிக்கப்படுகின்றனவா ? தென் னாற்காடு மாவட்டத்தில் எவ்வளவு ஏக்கர் பயிரிடப்படுகிறது ? இந்த தோட்டங்களில் பயிரிட்டதனால் கிடைத்த மொத்த வருவாய் என்ன ? மற்ற மாவட்டங்களில் இது போன்று முந்திரித் தோட்டங்களில் பயிரிட்டதனால் கிடைத்த வருவாய் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

1969 மார்ச் 25]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சில தோட்டங்கள் தனியார் துறையிலே இருக்கின்றன. காட்டிலாகா வசமுள்ள நிலங்களில் முந்திரி சாகுபடி செய்ய அதை ஏலத்திற்கு விடுகிருர்கள். கனம் அங்கத்தினர் எவ்வளவு ஏக்கர் பயிரிட்டிருக்கிருர்கள் என்று கேட்கிருர்கள். இப்பொழுது குத்தகைவிட்ட நிலங்கள் அந்தப் பகுதியிலே 1964–65-லே 13,726 ஏக்கர் தான். அதே ஏக்கர் தான் மீண்டும் விடப்பட்டிருக்கிறது. அவைகள் காட்டிலாகா வசமுள்ள நிலங்கள்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பாக்கி வரவேண்டுமென்று சொன்னுர்கள். அந்த பாக்கி எப்பொழுது முதல் வரவேண்டியிருக்கிறது ? அந்தப் பாக்கியின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்தப் பாக்கி 1964–65-ல் ஏற்பட்டது. அதை வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்ற தகவல் இல்லை. இந்த விவரம் கிடைத்ததனுலே நடவடிக்கை எடுக்கப்படுவதிலே காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும் அந்தத் தொகையை வசூல் செய்வதற்கு வேண்டிய திட்டங்களை அரசாங்கம் மேற்கொள்ளும்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, சர்க்காருக்குச் சொந்தமான முந்திரிக் காடுகளை இனித் தனியாருக்கு ஏலம் விடாமல் சர்க்காரே முந்திரி ஏற்றுமதிக்காகவும், முந்திரி எண்ணெய் தயாரிப்பதற்காகவும் அவற்றை பயன்படுத்தி, அன்னியச் செலாவணி சம்பாதிப்பது பற்றிப் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தென்னுர்க்காடு ஜில்லாவிலே காட்டுவளத் துறையிலே ஒரு முந்திரித் தோட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு அது பெரிய அளவில் இல்லை. தனியார்களே நிறைய வைத்திருக்கிருர்கள். தனிப்பட்டவர்களுடைய நிலங்களுக்கு அருகிலே இவைகள் இருக்கின்ற காரணத்தினுல் தனிப்பட்டவர்களுக்கு ஏலம் கொடுப்பதின் மூலம் அவர்களுக்கும் ஆதாயம் கிடைக்கின்றது. அரசாங்கத்திற்கும் ஆதாயம் கிடைக்கிறது. அரசாங்கம் நேரடியாக வைத்துக்கொண்டிருப்பதாலே திருட்டுப் போகக்கூடிய நிலை ஏற்படுவதைத் தடுக்கவும், பக்கத்திலே பட்டா நிலங்களைக் கடந்து செல்லும்போது இடையூறுகள் ஏற்படுவதைத் தடுக்கவும் தான் அருகிலுள்ளவர்களுக்கு ஏலத்திற்கு விடுகிறோம். அவர்களும் போட்டி போட்டுக்கொண்டு ஏலம் கேட்கிருர்கள். அதனுலே அவர்களுக்கு நன்மை இருந்தாலும் அரசாங்கத்திற்கும் வருமானம் வருகிறது.

தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி.

*458 வினு—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உணவு உற்பத்தியைப் பொறுத்த அளவில் தமிழ்நாடு உபரி மாநிலமாகக் கருதப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த உணவு தானியங்கள் எவ்வளவு உபரியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இம்மாநிலம் அரிசி உற்பத்தியில் ஏறத்தாழ தன்னிறைவுஉடையதென்றும் சிறு தானிய வகைகளில் பற்றுக்குறை உடையதென்றும், பருப்பு வகைகளில் அதிக அளவில் பற்றுக்குறை உடையதென்றும் கருதப்படுகிறது.

(இ) சிறு தானியங்கள் 2·55 லட்சம் டன்கள் வரை பற்றுக்குறை பருப்பு வகைகள் 3·75 லட்சம் டன்கள் வரை பற்றுக்குறை.